# October 9, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அதிகாரிகளின் கைது அதிகாரத்தை ஜிஎஸ்டி கவுன்சில் ரத்து செய்தது.

(i) தில்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்ற 57-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

(ii) தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன் உள்பட பல்வேறு மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் வரிக் கணக்கை தாமதமாக தாக்கல் செய்வது, தவறான தகவல்களைக் கொடுப்பது, நிர்ணயித்த தேதியில் கட்டணம் செலுத்தாமல் இருப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவோரிடம் வட்டியை அதிகமாக வசூலிக்கவும், அபராதம் விதிக்கவும் மட்டுமே அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(iii) மேலும், முறையாக ஜிஎஸ்டி செலுத்தாதவர்களைக் கைது செய்வதற்கான அதிகாரம்ரத்து செய்யப் பட்டதுடன், வழக்கு தொடர்வதற்கான உச்சவரம்பை ரூ.1 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக உயர்த்தவும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

(iv) இணையவழி மதிப்பீடு அறிமுகம்:

- இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறுகையில், பொது அபராதம் ரூ.25,000-இல் இருந்து ரூ.10,000-ஆக குறைக்கப்படவுள்ளது.
- பல்வேறு மாநிலங்களில் பதிவு செய்துள்ள மத்திய ஜிஎஸ்டி (சிஜிஎஸ்டி) செலுத்துபவர்களுக்கு ஒற்றைச் சாளர இணையவழி வரி மதிப்பீட்டு முறையை 2027-28 நிதியாண்டின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- உள்ளீட்டுச் சேவைகளுக்கு வரி விகிதத்தின்கீழ் திருப்பியளிக்கப்படும் தொகையை விரிவுபடுத்தவும் முடிவு செய்துள்ளோம்.
- 2019-க்கு முன்பும், அதன் பிறகு கரோனா பெருந்தொற்று காலத்திலும் பல்வேறு சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஒத்துழைப்புக்குச் சான்றாக ஜிஎஸ்டி கவுன்சில் திகழ்கிறது.

(v) அடுத்த ஆண்டு அமல்:

- ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் முன்மொழிப்பட்டுள்ள அனைத்துச் சீர்திருத்தங்களும் 2027, ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் அமலாகவுள்ளது.
- இந்தியாவில் தற்போது - சிஜிஎஸ்டி வரம்பின்கீழ் 69.5 லட்சம் பேர் வரி செலுத்துகின்றனர். அவர்களில் 2 லட்சம் பேர் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் சிஜிஎஸ்டி வரம்பில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

2. உலக சுகாதார அமைப்பின் புதிய தலைமை இயக்குநர் பதவிக்கு, தங்கள்

நாட்டின் மூத்த சுகாதாரத் துறை அதிகாரி சாங் லியை சீனா பரிந்துரைத்துள்ளது.

(i) தற்போதைய தலைமை இயக்குநரான டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸின் 3-ஆவது 5 ஆண்டு பதவிக்காலம் அடுத்தாண்டு ஆகஸ்டில் நிறைவடைகிறது. அமைப்பு விதிகளின்படி அவர் மீண்டும் போட்டியிட இயலாது என்பதால், வரும் மே மாதம் நடக்கும் உலக சுகாதார மாநாட்டில் அடுத்த தலைமை இயக்குநர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

(ii) சர்வதேச அமைப்புகளில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்த சீனா தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வரும் சூழலில், சாங் லியின் பரிந்துரை அறிவிப்பு வெளியாகியுள்ளது. கரோனா, 'சார்ஸ்' பெருந்தொற்று காலங்களில் தீவிரமாகப் பணியாற்றிய இவர், தாய்-சேய் நலம் மற்றும் சர்வதேச சுகாதாரக் கொள்கைகளில் நீண்ட அனுபவம் கொண்டவர் ஆவார்.

(iii) இப்பதவிக்கு சாங் லி தவிர, கத்தார், சவூதி அரேபியா, பெல்ஜியம், ஸ்பெயின், இந்தோனேசியா, போட்ஸ் வானா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

3. சர்வதேச விண்வெளி மையத்தில் (ஐஎஸ்எஸ்) சுமார் 8 மாதங்கள் தங்கி ஆராய்ச்சிப் பணிகளை முடித்த 4 விண்வெளி வீரர்கள் பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பினர்.

(i) ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் விண்கலம் மூலம் பூமிக்கு அழைத்து வரப்பட்ட அமெரிக்காவின் நாசாவைச் சேர்ந்த ஜெசிகா மேயர், ஜாக் ஹாத்வே, பிரான்ஸின் சோஃபி அடெனோ மற்றும் ரஷியாவின் ஆண்ட்ரிஃபெட்யாவ் ஆகிய 4 வீரர்கள், லாஸ் ஏஞ்சலீஸ் கடற்கரைக்கு அப்பால் பசிபிக் பெருங் கடலில் பாதுகாப்பாக இறங்கினர்.

4. ஒலியை விட ஐந்து மடங்கு அதித வேகத்தில் பாய்ந்து சென்று, எதிரிகளின் ஏவுகணை தடுப்பு அரண்களை ஏமாற்றி தாக்கும் திறன் கொண்ட தனது முதல் உள்நாட்டு 'ஹைப்பர்சோனிக்' அதிவேக ஏவுகணையை தென் கொரியா வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

(i) இச்சோதனையை நேரில் பார்வையிட்ட தென் கொரிய அதிபர் லீ ஜே மியுங், நாட்டின் மரபுசார் பாதுகாப்பு வலிமையை உயர்த்துவதில் இது மிக முக்கியமான மைல்கல் என்று தெரிவித்தார்.

(ii) திட்டமிட்ட உயரத்தில் உந்து ராக்கெட்டிலிருந்து பிரிந்த அந்த ஏவுகணை, செங்குத்தாகவும் கிடைமட்டமாகவும் திசைமாறிப் பயணித்து நிர்ணயிக் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(iii) கொரிய தீபகற்ப பகுதியில் எதிரிகளின் முக்கிய இலக்குகளைத் திடீரெனத் தாக்கும் வல்லமை பெற்றுள்ள இந்த ஏவுகணை சோதனையின்போது, அந்நாட்டின் சக்தி வாய்ந்த 'ஹியூன்மூ-5' பாலிஸ்டிக் ஏவுகணையையும் அதிபர் லீ ஜே மியுங் ஆய்வு செய்தார்.

(iv) வட கொரியா-தென் கொரியா எல்லைப் பகுதியில் கண்ணிவெடிகள் கடந்த மாதம் வெடித்ததில் 3 தென் கொரிய வீரர்கள் காயம் டைந்ததைத் தொடர்ந்து, கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

5. அமெரிக்காவில் 'எச்-1பி' விசா மூலம் தங்கிப் பணியாற்றும் ஊழியர்கள் நிரந்தர குடியுரிமைக்கான 'கிரீன் கார்டு' விண்ணப்பிக்கும் திட்டத்திலிருந்து, இன்ஃபோசிஸ், டிசிஎஸ், விப்ரோ, எச்.சி.எல். டெக். உள்பட பல்வேறு முன்னணி ஐ.டி. நிறுவன ஊழியர்களுக்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

(i) மேலும், மைக்ரோசாஃப்ட், காக்னிசண்ட், கேப்ஜெமினி, அடோப் ஆகிய நிறுவனங்களும் இத்தடை பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இந்நிறுவனங்கள் மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி, வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் இந்நடவடிக்கையை அறிவித்தார்.

(ii) அமெரிக்கர்களின் வேலைவாய்ப்புகளைப் பறிப்பதாகவும், முறைகேடுகள் அதிகரித்துள்ளதாகவும் கூறி, 'எச்-1பி' விசா திட்டத்துக்கு டிரம்ப் ஆதரவாளர்கள் நீண்டகாலமாக எதிர்ப்பு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

6. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் செயல்பாடு குறித்து மத்திய விளையாட்டு அமைச்சகம், வரும் 13-ஆம் தேதி சீராய்வு செய்யவுள்ளது. விளையாட்டுகளுக்கான தேசிய சம்மேளனங்கள், சங்கங்கள் பங்கேற்கும் இந்த ஆய்வின்போது, பாட்மின்டன், துப்பாக்கி சுடுதல், தடகளம் ஆகியவற்றில் அனுபவ வீரர், வீராங்கனைகள் பலரும் தடுமாற்றத்தை சந்தித்தது முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளது.

(i) ஒலிம்பிக் பதக்க வாய்ப்புள்ளோருக்கான ஆதரவுத் திட்டத்தின் கீழ், போதிய நிதி விடுவிக்கப்பட்டும் கடந்த ஆசிய விளையாட்டுகளை (106 பதக்கங்கள்) விட, இந்த முறை இந்தியாவின் பதக்கம் குறைந்தது தொடர்பாக ஆலோசிக்கப்படவும் உள்ளது.

(ii) கோடிகளில் செலவு செய்து போட்டியாளர்களை தயார் செய்யும் நிலையில், போட்டிக்கு முன்பாக காயமடைந்துவிட்டதாக சிலர் கூறியது ஏற்புடைய தல்ல என்றும், அதுதொடர்பாகவும் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் மத்திய விளையாட்டு அமைச்சக வட்டாரங்கள் கூறின.

(iii) ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவிலிருந்து 495 வீரர், வீராங்கனைகள், 36 விளையாட்டுகளில் பங்கேற்றனர். போட்டியில் இந்தியா 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம் என, 85 பதக்கங்களுடன் 4-ஆம் இடம் பிடித்தது. இந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக 3 ஆண்டுகளில் சுமார் ரூ.700 கோடி செலவிட்டதாக மத்திய விளையாட்டு அமைச்சகம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

7. இந்திய விமானப் படை தினத்தை முன்னிட்டு, விமானப் படை வீரர்களுக்கு

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

(i) இந்திய விமானப் படை நிறு விமானப்வப்பட்டதையும், படை வீரர்கள் ஆற்றிய தியாகங்களை நினைவுகூரும் வகையிலும் அக்டோபர் 8-ஆம் தேதி விமானப் படை தினமாக அனுசரிக்கப்படுகிறது.

8. கனடா எழுத்தாளரும், கவிஞர் மற்றும் மொழி பெயர்ப்பாளருமான ஆன் கார்சனுக்கு (76) 2026-ஆம் ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக் கப்பட்டுள்ளது.

(i) பாரம்பரிய இலக்கிய மரபோடு, ஒரு விளையாட்டுத் தனமான உரையாடலுடன் சமகால இலக்கியத்துக்கு புதிய வடிவங்களை உருவாக்கிய துணிச்சலான மற்றும் புதுமையான படைப்புகளுக்காக அவருக்கு இந்த பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ii) இலக்கியத் துறையில் சிறப்பாக செயல்படுவோருக்கு ஆண்டுதோறும் ஸ்வீடிஸ் அகாதெமியால் இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, இந்தாண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு, ஆன் கார்சனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(iii) கனடாவின் டொரான்டோ நகரில் பிறந்த அவர், தற்போது தனது குடும்பத்தினருடன் ஐஸ்லாந்தில் வசித்துவருகிறார். புராணகிரேக்க மற்றும் ரோம கால இலக்கியங்களில் இருந்து கருப்பொருள்களையும், கதைகளையும் ஆதாரமாக கொண்டு ஏராளமான கவிதை, கட்டுரை, புனைகதைகளை அவர் எழுதியுள்ளார்.

(iv) இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்கு கார்சன் தேர்வு செய்யப்பட்டது குறித்து அவரை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க முயன்றபோது, காற்றின் சத்தத்தை அவர் கேட்டுக் கொண்டிருந்ததாக ஸ்வீடிஸ் அகாதெமி நிரந்தர செயலாளர் இன்க்ரீட் கார்ல்பெர்க் தெரிவித்தார். நோபல் பரிசுக்கு தனது பெயர் தேர்வு செய்யப்பட்டது குறித்து கேள்விப்பட்டு கார்சன் மிகவும் ஆச்சரியப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(v) கார்சன் எழுதிய புத்தகங்களில், 'இரோஸ் தி பிட்டர்ஸ்வீட்', ‘ஆட்டோபயோகிராபி ஆஃப் ரெட்', 'மென் இன் தி ஆஃப் ஹவர்ஸ்', 'நார்மா ஜின் பேக்கர் ஆஃப் டிராய் உள்ளிட்டவை புகழ்பெற்றவை ஆகும்.

(vi) இன்று அமைதிக்கான நோபல்:

- 2026-ஆம் ஆண்டுக்கான மருத்துவம், இயற்பியல், வேதியியல் ஆகியவற்றுக்கான நோபல் பரிசு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு விட்டது. இதையடுத்து, இலக்கியத்துக்கான நோபல் பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதிக் கான நோபல் பரிசு வெள்ளிக்கிழ மையும் (அக்.9), பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு திங்கள்கிழ மையும்

அறிவிக்கப்படவுள்ளன.

9.கே. பராசரன் – சட்ட அறிஞரும், இந்தியாவின் முன்னாள் தலைமை வழக்கறிஞரும்

(i) முக்கிய நிகழ்வும் மைல்கல்லும்

- 2026 அக்டோபர் 9-ஆம் தேதி, சட்ட அறிஞரும் இந்தியாவின் முன்னாள் தலைமை வழக்கறிஞருமான கே. பராசரனின் 100-ஆவது பிறந்தநாளைக் குறிக்கிறது.
- அரசியலமைப்புச் சட்டத்தில் ஆழ்ந்த அறிவு, நீதிமன்ற வாதத்திறன், தனிப்பட்ட பணிவு மற்றும் தார்மீக நேர்மை ஆகியவற்றை ஒருங்கே கொண்டிருந்த அவர், சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவின் மிகுந்த மதிப்பிற்குரிய சட்ட வல்லுநர்களில் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

(ii) ஆரம்பகால வாழ்க்கையும் குடும்பப் பின்னணியும்

- பிரிட்டிஷ் காலனிய ஆட்சியின் இறுதிக் காலகட்டத்தில், சட்டம் மற்றும் சமூகப் பண்பாட்டில் சிறந்து விளங்கிய குடும்பச் சூழலில் பராசரன் பிறந்தார்.
- அவரது தந்தை கேசவ ஐயங்கார், சென்னையின் புகழ்பெற்ற சட்ட வல்லுநர்களில் ஒருவராவார். புதுதில்லியில் அமைந்திருந்த இந்தியக் கூட்டாட்சி நீதிமன்றத்தில் அவரது சட்ட வாதங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

(iii) முக்கியப் பணிசார் மைல்கற்களும் வழக்குகளும்

- இந்தியாவின் தலைமை வழக்கறிஞராக நியமனம்: 1983-ஆம் ஆண்டு, லால் நாராயண் சின்ஹாவுக்குப் பிறகு இந்தியாவின் தலைமை வழக்கறிஞராகப் பராசரன் நியமிக்கப்பட்டார்.
- முதல் நீதிபதிகள் வழக்கு (First Judges Case): 1981-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த முக்கியத்துவம் வாய்ந்த வழக்கில் அவர் முன்வைத்த வாதங்கள், அவரது சட்ட நிபுணத்துவத்தைப் பொதுமக்களிடையே பரவலாக அறியச் செய்தன.
- மூத்த வழக்கறிஞராகப் புகழ்: 1980-கள், 1990-கள் மற்றும் 2000-களின் தொடக்கக் காலங்களில், நாட்டின் மிகவும் நாடப்பட்ட மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட ஆலோசகர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார்.
- ராம ஜென்மபூமி வழக்கு (2018): 2018-ஆம் ஆண்டு, ராம ஜென்மபூமி வழக்கில் வாதாடும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். நூற்றாண்டுக்கு ஒருமுறை கிடைக்கக்கூடிய, விதியாலும் இறையருளாலும் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பாக இதனை அவர் கருதினார்.

(iv) தொழில்முறை நெறிமுறைகளும் தனிப்பட்ட பண்புகளும்

- பணிவு, அன்பான அணுகுமுறை மற்றும் எளிதில் அணுகக்கூடிய தன்மை ஆகியவற்றின் காரணமாக, சட்டத் துறையினரால் அவர் வழக்கறிஞர் சமூகத்தின் பிதாமகர் (Pitamaha) என்று பரவலாகப் போற்றப்படுகிறார்.

- வணிக நோக்கங்களைக் காட்டிலும் உண்மையான அக்கறை, தார்மீகத் தெளிவு மற்றும் ஆழ்ந்த ஞானம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆலோசனைகளை வழங்குபவர் என்பதால், அவர் அறிவின் “திறந்த மூலக் களஞ்சியம்” (Open-source repository of knowledge) என வர்ணிக்கப்படுகிறார்.
- கிழக்கத்திய இலக்கியங்களுக்கும் மேற்கத்திய சட்டத் தத்துவங்களுக்கும் இடையே உடனடியாக ஒப்புமைகளைக் கண்டறியும் தனித்துவமான திறனை அவர் பெற்றுள்ளார். இதன் மூலம், பண்டைய இந்தியப் பண்பாட்டு மரபையும் நவீன அரசியலமைப்புச் சட்டவியலையும் ஒருங்கிணைக்கிறார்.